"THE HINDU"

PAGE NO: 03

DATE: 26.07.21

# Pondicherry varsity launches new courses in Lakshadweep

## The university issues NoC to the island's administration

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

The Pondicherry University has cleared a proposal from the administration of the Union Territory of Lakshadweep to introduce three-year undergraduate and one-year diploma vocational courses from the 2021-2022 academic session.

A No-objection Certificate has also been issued to the Lakshadweep administration for affiliation.

The proposal is to offer new three-year undergraduate vocational courses in Tourism and Service Industry and Software Development, and one-year diploma courses in Catering and Hospitality, Marine, Electrical and Electronics and Mechanical Engineering at Lakshadweep, Kadmat and




Minicoy Islands for 2021-2022.

Vice-Chancellor Gurmeet Singh, at a recent ceremony, presented the NoCs to Vijendra Singh Rawat, Secretary, Department of Technical Education and Skill Development, Lakshadweep administration.

Mr. Singh said it was gratifying that Pondicherry University, which continued to be one of the leading universities in the world in the rankings particularly on research activities, had introduced such vocational courses for the welfare of tribal students.

He appealed to the youth residing in the islands to make use of the educational opportunities offered by the university. This is a significant step towards the development of the Lakshadweep islands, which need a great deal of attention on higher education as well as job-oriented courses.

Sivaraj of Pondicherry Technological University, Chandra Sekhara Rao, Dean, College Development Council of Pondicherry University, B. Chithra, Registrar, and S. Rajkumar, nodal officer for Andaman and Nicobar Islands Centre, were present.

"DINAKARAN"

DATE : 26.07.2021

PAGE NO: 07

புதுவை பல்கலைக்கழகம் சார்பில்

# லட்சத்தீவுகளில் புதிய பாடப்பிரிவுகள் துவங்க தடையில்லா சான்றிதழ் வழங்கல்



புதுவை பல்கலைக்கழகம் சார்பில் லட்சத்தீவுகளில் புதிய பாடப்பிரிவுகள் தொடங்குவதற்கான அனுமதி கடிதத்தை துணைவேந்தர் குர்மீத் சிங் வழங்கினார்.

புதுச்சேரி, ஜூலை 26: புதுவை பல்கலைக்கழகம் சார்பில் இந்த கல்வியாண்டு முதல் லட்சத்தீவுகளில் புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த படிப்புகளுக்கான தடையில்லா சான்றிதழ்கள் வழங்குகின்ற விழா பல்கலைக்கழகத்தில் நடந்தது. துணைவேந்தர் குர்மீத் சிங் கலந்து கொண்டு கொள்கை அளவிலான அனுமதி கடிதங்களை வழங்கினார். லட்சத்தீவு நிர்வாகம், தொழிற்கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு துறை செயலர் விஜேந்திர சிங் ராவத் மற்றும் கல்வி அதிகாரி சித்திக் அலி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இதன் மூலம் லட்சத்தீவுகளில் உள்ள காட்மேட் மற்றும் மினிகாய் தீவுகளில் சுற்றுலா மற்றும் சேவை, மென்பொருள் துறைகளில் இளநிலைப் பட்டப் படிப்புகளும், உணவு பரிமாறுதல் மற்றும் விருந்தோம்பல், கடல் பொறியியல், மின்சாரம் மின்னனு மற்றும் இயந்திரவியல் ஆகிய துறைகளில் தொழிற்கல்வி சார்ந்த புதிய பட்டயப் படிப்புகள் நிகழாண்டு (2021 - 2022) முதல் புதியதாக தொடங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சியில் புதுச்சேரி பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி பேராசிரியர் சிவராஜ், பல்கலைக்கழக கல்லூரி மேம்பாட்டுக் குழு புல முதன்மையர் (பொறுப்பு) சந்திரசேகர ராவ், பதிவாளர் சித்ரா, அந்தமான் நிகோபார் தீவுகளுக்கான கல்வி மைய இணைப்பு அதிகாரி ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

"HINDU TAMIL"

PAGE NO: 03 DATE: 26.07.21

### மத்திய பல்கலைக்கழகத்தில்

# புதுச்சேரி மாணவர்களுக்கான 25 சதவீத இடஒதுக்கீடு கிடைக்குமா?

## ● ஆளுநரும், கல்வியமைச்சரும் நடவடிக்கை எடுப்பார்களா

■ புதுச்சேரி

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் புதுச்சேரி மாணவர்களுக்கு அனைத்து துறைகளிலும் 25 சதவீத இடஒதுக்கீடு தரலாம் என்ற ஆய்வுக்குழு அறிக்கை மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறைக்கு அனுப்பப்பட்டு 5 ஆண்டுகளாக பதில் வராத சூழல் நிலவுகிறது. இதற்கான ஒப்புதல் பெற்று நடைமுறைப்படுத்த புதுச்சேரி ஆளுநரும், கல்வியமைச்சரும் நடவடிக்கை எடுப்பார்களா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் கடந்த 1985-ல் தொடங்கப்பட்டபோது புதுச்சேரியைச் சேர்ந்தோர் படிக்க 25 சதவீத இடஒதுக்கீடு கோரப்பட்டது. பல்கலைக்கழகம் ஆரம்பித்த முதல் 10 ஆண்டுகளில் புதுச்சேரி மாணவர்களுக்கென்று தனி ஒதுக்கீடு எதுவும் அளிக்கப்படவில்லை. ஆனால் காலப்போக்கில் புதுச்சேரி மாணவர்கள் பல்கலைக் கழகத்தால் பெரிதும் புறக்கணிக்கப்பட்டபோது, புதுச்சேரி மாணவர்களுக்கு தனி இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது.

இதை உணர்ந்த அப்போதைய துணைவேந்தர் பேராசிரியர் ஞானம் பல்கலைக்கழக கல்விக்குழுவின் உத்தரவுப்படி, புதுச்சேரி கலைக் கல்லூரிகளில் இல்லாத, பல்கலைக் கழகத்தில் உள்ள அனைத்து பட்டமேற்படிப்புகளிலும் புதுச்சேரி மாணவர்களுக்கு 25 சதவீத ஒதுக்கீடு அளித்து 1997-ம் ஆண்டு உத்தரவிட்டார். அன்றிலிருந்து இந்த இடஒதுக்கீடு முறை அமலுக்கு வந்தது. அப்போது 8 படிப்புகளுக்கு வழங்கப்பட்ட இந்த ஒதுக்கீடு படிப்படியாக 18 படிப்புகளுக்கு வழங்கப்பட்டது.

புதுச்சேரி பல்கலைக்கழகம் 2008-2012-ம் ஆண்டுகளில் நிறைய படிப்புகளை தொடங்கியது. ஆனால், அவற்றில் இடஒதுக் கீடு அளிக்க தவறிவிட்டது. இதையடுத்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையில் அனைத்து படிப்புகளிலும் இடஒதுக்கீடு அளிக்கலாம் என்று பரிந்துரைத்தது. ஆனால் அதன் பிறகு வந்த துணைவேந்தர் இந்த முடிவை மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறையின் அனுமதிக்கு அனுப்பி வைத்தார். இந்தக் கோப்பு அனுப்பி 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. இன்னும் அமைச்சகத்திடம் இருந்து ஒரு பதிலும் வரவில்லை. முந்தைய புதுச்சேரி அரசும், எம்பிக்களும் இதில் கவனம் செலுத்தவில்லை என்ற புகாரும் உள்ளது.

இதுதொடர்பாக இந்திய ஜனநாயக வாலிபர் சங்க புதுச்சேரி தலைவர் ஆனந்த் கூறுகையில், "புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தில் 66-க்கும் மேற்பட்ட பாடப்பிரிவுகள் செயல்பட்டு வருகின்றது. இவற்றில் 18 பாடப்பிரிவுகளில் மட்டுமே புதுச்சேரி மாணவர்களுக்கு 25 சதவீதம் வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து பாடப்பிரிவுகளிலும் புதுச்சேரி மாணவர்களுக்கு 25 சதவீதம் ஒதுக்கீடு கோரி பல போராட்டங்கள் நடத்தினோம். இக்கல்வியாண்டுக்கான அறிவிப்பிலும் இடஒதுக்கீடு இல்லை" என்று குறிப்பிட்டார்.

புதுச்சேரிய்யைச் சேர்ந்த மாணவர்கள் கூறுகையில், "புதுச்சேரி, காரைக்கால் ஜிப்மரில் 27 சதவீத இடஒதுக்கீடு புதுச்சேரி மாணவர்களுக்கு தரப்படுகிறது. ஆனால் மத்திய பல்கலைக்கழகம் புதுச்சேரியைச் சேர்ந்தோரை நிராகரிக்கிறது. வேலைவாய்ப்பு உள்ள பாடப்பிரிவுகளில் புதுச்சேரி மாணவர்களுக்கு இடஒதுக்கீடு தரப்படுவதில்லை. பல்கலைக்கழக நிர்வாகக்குழு கூட்டத்திலேயே இடஒதுக்கீட்டை முடிவு செய்து அறிவிக்கலாம். ஆனால், மத்திய அரசு தான் அறிவிக்க வேண்டும் என்கின்றனர். தற்போது ஜிப்மரை விட புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் கட்டணம் அதிகம். மத்தியில் ஆட்சியிலுள்ள பாஜக கூட்டணி அரசுதான் புதுச்சேரியில் அமைந்துள்ளதால் புதிய அரசு இவ்விஷயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக ஆளுநரும், கல்வியமைச்சரும் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்பில் உள்ளோம்" என்றனர்.